

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 198 வாகனங்களை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்து, அலுவலர்களுக்கு வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆணையர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 72 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 99 கோடியே 35 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 403 வகுப்பறைகள், 54 கழிவறைகள், 13 ஆய்வகங்கள், 2 குடிநீர் வசதிகள் என 472 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மரு. மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் எஸ்.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



“ஓரணியில் தமிழ்நாடு” என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில், 50 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2025) திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சன்னதி தெருவில் மக்களை நேரடியாக சந்தித்து, “ஓரணியில் தமிழ்நாடு” திட்டத்தில் உறுப்பினர்களை சேர்த்தார். உடன், கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் மற்றும் கழக நிருவாகிகள் உடனிருந்தனர்.




“ஓரணியில் தமிழ்நாடு” என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில், 50 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2025) திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சன்னதி தெருவில் மக்களை நேரடியாக சந்தித்து, “ஓரணியில் தமிழ்நாடு” திட்டத்தில் உறுப்பினர்களை சேர்த்தார். உடன், கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் மற்றும் கழக நிருவாகிகள் உடனிருந்தனர்.

### முதல்வர் கல்லூரிகளைத் திறப்பதை கொச்சைப்படுத்துவதா?

# கோவையில் எடப்பாடி பழனிசாமியை கண்டித்து கழக மாணவரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாணவரணிச் செயலாளர் இரா.இராஜீவ்காந்தி அறிக்கை!

*சென்னை, ஜுலை 12 -*

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி; ஏழை, எளிய, சாமானிய மாணவர்களுக்கு உயர்கல்வி பெற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள்கல்லூரிகளைத் திறந்து வைத்ததை கொச்சைப்படுத்தும் விதமாக கோவையில் பேசியிருக்கும் எடப்பாடி பழனிசாமியை கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் வருகிற ஜுலை 14ஆம் தேதி “கோவை, டாடா பாத், சிவானந்தா காலனி” யில்

“மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும் என்று மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ் காந்தி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி; ஏழை, எளிய, சாமானிய மாணவர்களுக்கு உயர்கல்வி பெற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் கல்லூரிகளைத் திறந்து வைத்ததை “கல்லூரிகளைத் திறப்பது சதிச்செயல்” என பதவி சுகத்துக்காக பேரறிஞர் அண்ணாவை அடகு வைத்த எடப்பாடி பழனிசாமி இப்போது, “உங்களுக்கெல்லாம் எதற்கு கல்வி?” என்ற சங்கிகளின் குரலாய் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறார்.

கோவில்களுக்கு மக்கள் காணிக்கையாகக் கொடுக்கும் உபரி நிதியிலிருந்து கல்வி நிலையங்கள், சிறார், முதியோர் பராமரிப்பு நிலையங்கள், மருத்துவமனைகள் அமைக்கலாம் என்பது இந்து சமய அறநிலையத்துறையின் சட்டங்களில் ஒன்று. ஆனால் அதுகூடத் தெரியாமல் திராவிட இயக்கத்தின் துரோகியாக, கல்விக்காக திராவிட மாடல் அரசு எடுக்கும் முன்னெடுப்புகளைக் கொச்சைப்படுத்தும் விதமாக கோவையில் பேசியுள்ள எடப்பாடி பழனிசாமியை கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் ஜுலை 14ஆம் தேதி, பிற்பகல் 2.30 மணி அளவில், “கோவை, டாடாபாத், சிவானந்தா காலனி”யில், எனது தி.மு.க. (மாணவர் அணி செயலாளர் இரா.ராஜீவ் காந்தி) தலைமையில் மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் அவர்களது தோழர்களுடன் பெருந்திரளாக பங்கேற்று, போராட்டத்தை வெற்றியடையச் செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



”ஓரணியில் தமிழ்நாடு என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில், 50 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2025) திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சன்னதி தெருவில் மக்களை நேரடியாக சந்தித்து, “ஓரணியில் தமிழ்நாடு” திட்டத்தில் உறுப்பினர்களை சேர்த்தார். உடன், கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் மற்றும் கழக நிருவாகிகள் உடனிருந்தனர்.

### திருவாரூர் மாவட்டம், கிடாரங்கொண்டானில் அமைந்துள்ள

# கல்லூரி மாணவ - மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதியில் ஆய்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று பார்வையிட்டார்!

*சென்னை, ஜுலை 12-*

திருவாரூர் மாவட்டம், கிடாரங்கொண்டானில் அமைந்துள்ள கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தற்கால இளம் சந்ததியினர் அனைவரும் சாதி வேறுபாடின்றி ஒன்றிணைந்து, எதிர்கால தமிழ்ச் சமுதாயத்தை, சமத்துவச் சமுதாயமாகக் கட்டமைத்திட, பல்வேறு சாதி சமயப் பிரிவுகளின் பெயர்களின்கீழ் செயல்பட்டு வரும் மாணவர் விடுதிகளின் பெயர்களை மாற்றிட தமிழ்நாடு அரசு முடிவு செய்து, அதன்படி பல்வேறு துறைகளின்கீழ் செயல்பட்டு வரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளை ‘சமூகநீதி விடுதிகள்’ என்று பெயர் மாற்றம் செய்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 7.7.2025 அன்று உத்தரவிட்டார்.

“சமூகநீதி விடுதி” என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை யொட்டி, அதனை பார்வையிடும் நோக்கில், முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2025) அரசு விழா நடைபெறும் திருவாரூர், எஸ்.எஸ். நகர் செல்லும் வழியில், கிடாரங்கொண்டானில் அமைந்துள்ள கல்லூரி மாணவர்களுக்கான சமூகநீதி விடுதி மற்றும் கல்லூரி மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதிகளுக்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, சமூகநீதி விடுதியில் உள்ள நூலகம், சமையலறை உணவருந்தும் அறை, பொருள் இருப்பு அறை ஆகியவற்றை மா முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், விடுதியில் உள்ள மாணவ, மாணவியர்களிடம் அவர்களின் தேவைகள், விடுதியில் உள்ள வசதிகள், வழங்கப்படும் உணவின் தரம் ஆகியவை குறித்தும், உரிய நேரத்தில் உணவு வழங்கப்படுகிறதா என்பது குறித்தும், வார்டன்கள் பணிக்கு வருவது குறித்தும் கேட்டறிந்தார்.

அத்துடன் சமையலறைக்கு சென்று உணவு தயாரிக்கும் பணியாளர்களிடம், காய்கறிகள், மளிகைப் பொருட்கள் இருப்பு குறித்து கேட்டறிந்து, சுகாதாரமான முறையில் உணவு தயாரித்து வழங்கிட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கலைவாணன், நாகை மாலி, திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன், தாட்கோ தலைவர் இளையராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### உள்நாட்டு பாதுகாப்பில் நாட்டிலேயே தமிழ்நாடு காவல் துறை முன்னணி!

# முக்கியத் தீவிரவாதிகள் கைது: தமிழ்நாட்டின் தீவிரவாத தடுப்புப் பிரிவினருக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜுலை 12-**

**உள்நாட்டு பாதுகாப்பில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது என்பதை நிரூபிக்கும் வகையில், முக்கிய தீவிரவாதிகள் மூன்று பேரை கைது செய்துள்ள தீவிர வாத தடுப்புப் பிரிவினருக்கு பாராட்டு தெரிவித்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

தீவிரவாதத் தடுப்புப் படையினர் முக்கிய தீவிரவாதிகளை கைது செய்துள்ளதை பாராட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

நமது திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்தபின், 2023ஆம் ஆண்டில், தீவிரவாத எதிர்ப்புப் பணிகளில் தனிக்கவனம் செலுத்துவதற்காக நுண்ணறிவுப் பிரிவின் கீழ், தீவிரவாதத் தடுப்புப் படை (Anti Terrorism Squad) புதிதாக உருவாக்கப்பட்டது.

கடந்த 30 ஆண்டுகளாக, தமிழ்நாடு காவல்துறை, ஒன்றிய அரசின் புலனாய்வு அமைப்புகள், அண்டை மாநிலக் காவல்துறையினர் என யாருக்கும் பிடிபடாமல் இருந்த, அபுபக்கர் சித்திக் உள்ளிட்ட மூன்று முக்கியத் தீவிரவாதிகளை, அண்மையில் நமது ATS படையினர் சிறப்பாகச் செயல்பட்டுக் கைது செய்துள்ளனர். உள்நாட்டுப் பாதுகாப்பில் நமது நாட்டிலேயே தமிழ்நாடு காவல்துறை முன்னணி வகிக்கிறது என்பதை மீண்டும் நிலைநாட்டியுள்ள ATS படையினருக்கும், அவர்களை வழிநடத்திய நுண்ணறிவுப் பிரிவு அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்தக் கைது நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்து உதவிய கர்நாடக மற்றும் ஆந்திர மாநிலக் காவல்துறையினருக்கும் எமது நன்றிகள்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

**காவல் துறை செய்தி!**

இதுகுறித்து தமிழ்நாடு காவல் துறை தீவிரவாதத் தடுப்புப் பிரிவு செய்திக் குறிப்பு வருமாறு:-

கோயம்புத்தூர் வெடி குண்டு வழக்கிலும், மாநிலத்தில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற வகுப்புவாத கொலை வழக்குகளிலும் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்படும் சாதிக் (எ) ராஜா (எ) டெயிலர் ராஜா (எ) வளர்ந்த ராஜா (எ) ஷாஜஹான் அப்துல் மஜீத் மகாண்டார் (எ) ஷாஜஹான் ஷைக் என்பவரை தமிழ்நாடு காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கர்நாடக மாநிலம் விஜய புரா மாவட்டத்தில் வசித்துவந்த இக்குற்றவாளியை திட்டவட்டமான மற்றும் நம்பத்தகுந்த உளவுத்தகவலின் அடிப்படையில், தீவிரவாதத் தடுப்புக் குழுவினர் மற்றும் கோயம்புத்தூர் மாநகர காவல்துறையினர் இணைந்து கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சாதிக் (எ) ராஜா (எ) டெயிலர் ராஜா கோயம்புத்தூரை பூர்வீகமாகக் கொண்டவர் என்பதோடு மட்டுமல்லாமல் இவர் குற்றச் செயல்களில் ஈடுபடத் துவங்கிய காலத்திலிருந்து கைது செய்யப்படா மல் கடந்த 29 ஆண்டுகளாக தலைமறைவாக வாழ்ந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பல பயங்கரவாத மற்றும் வகுப்புவாத கொலை வழக்குகளில் ஈடுபட்டவர் என்பதோடு 58 பேர் உயிரிழந்த மற்றும் 250 பேர் காயமடைந்த 1998 கோயம்புத்தூர் வெடிகுண்டு வழக்கிலும் முக்கியக் குற்றவாளி ஆவார். மேலும், இவர் 1996ம் ஆண்டு கோயம்புத்தூரில் பெட்ரோல் குண்டு வீசியதில் ஜெயிலர் பூபாலன் உயிரிழந்த வழக்கிலும், அதே ஆண்டு நாகூரில் சயீதா கொலை வழக்கிலும், 1997ம் ஆண்டு மதுரையில் சிறை அதிகாரி ஜெயபிரகாஷ் கொலை வழக்கிலும் முக்கியக் குற்றவாளி ஆவார்.

சமீபத்தில் தீவிரவாதத் தடுப்புப் பிரிவினர் கோயம்புத்தூர் மாநகர காவல்துறையினருடன் இணைந்து இந்தியாவில் மிகவும் தேடப்பட்டு வந்த முக்கிய குற்றவாளிகளில் ஒருவரான அபூபக்கர் சித்திக் மற்றும் மொகமது அலி (எ) யூனுஸ் ஆகியோரை ஆந்திர பிரதேச மாநிலம் அன்னமய்யா மாவட்டத்தில் கைது செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கர்நாடக மாநிலம் விஜயபுரா மாவட்டத்திலிருந்து தற்போது சாதிக் (எ) டெய்லர் ராஜா கைது செய்யப்பட்டிருப்பது என்பது தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு நீண்ட காலமாக தலைமறைவாக இருந்துவந்த குற்றவாளிகளை பிடித்த மூன்றாவது வெற்றிகரமான நடவடிக்கையாகும்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.